**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-117/2023**
**Dated :21.07.2026**
**Deposition of witness for : P.W.1**

**Cross examination of PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | வயது | : | 57 |
| தந்தை பெயர் | : | தங்கவேல் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | அரியாணிப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)
**BNSS. பிரிவு 348–ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 248/2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) 1 ஆம் எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் சொந்தமான பூர்வீக சொத்து தெக்கிக்காடு கொல்லை என்ற சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து எங்கள் ஊருக்கு தெற்கில் மழவராயன் கொல்லையின் அருகில் உள்ளது என்றால் அதிலிருந்து 2 கொல்லைகள் தாண்டி உள்ளது. அந்த தெக்கிக்காடு கொல்லையில் என்னுடைய பங்கினை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பிரச்சனைக்கு 2 நாட்களுக்கு முன்பு விற்பனை செய்தேன். அந்த கொல்லையில் இருந்த மின் இணைப்பு சம்மந்தமாகதான் எனக்கும் 1ஆம் எதிரிக்கும் இடையே பிரச்சனை என்றால் சரிதான். அந்த கொல்லைக்கு எனது அப்பா பெயரில் தான் மின் இணைப்பு வந்தது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல இவ்வழக்கு பிரச்சனைக்கு 2 நாட்களுக்கு முன்பாக நான் விற்பனை செய்யவில்லை என்றாலும் அதற்கு 2 வருடங்களுக்கு முன்பே நான் விற்பனை செய்துவிட்டேன் என்றாலும் சரியல்ல.

2) கரும்பு கொல்லையை எரித்துவிட்டதாக 1 ஆம் எதிரி என்மீது அளித்த புகாரின்பேரில் கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் என்மீது குற்ற எண்.89/2011 இல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பற்றிய உண்மை விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீடு வடக்கு பார்த்த வாசல் உள்ளது என்றால்

சரிதான். எங்கள் வீட்டிற்கு கிழக்கில் தான் நான் மாடு கட்டும் இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாடு கட்டும் இடத்தில் நான் மேற்கு பகுதியிலும் எனது தம்பி கிழக்கு பகுதியிலும் மாடு கட்டி உள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சம்பவ நேரத்தில் மாடு கட்டும் இடத்தில் கொட்டகை இருந்ததா என்றால் எனது பகுதியில் கொட்டகை அமைத்திருந்தேன். 1 ஆம் எதிரியின் பகுதியில் கொட்டகை இல்லை. 1 ஆம் எதிரி அவர்கள் இடத்தில் சென்ட்ரிங் கம்பி ஊன்றி அதில் மாடு கட்டி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நாங்கள் மாடுகள் மட்டும் தான் வைத்திருந்தோம் என்றாலும், 1 ஆம் எதிரி ஆடுகள் மற்றும் மாடுகள் வைத்திருந்தார் என்றால் தெரியாது. அந்த மாடு கட்டும் இடத்திற்கு நேர் எதிரே தான் 1 ஆம் எதிரியின் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3) நான் சம்பவத்தன்று தஞ்சாவூருக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் தான் வீட்டிற்கு திரும்பி வந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனது மகன்களுக்கும் இடையில் சம்பவத்தன்று பிரச்சனை நடந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சம்பவம் தொடர்பாக நான் தஞ்சாவூர் மருத்துவமனை சென்றுவிட்டேன் என்றாலும் எதிரிகள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்றுவிட்டார்கள் என்றாலும் அது எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் கவிதாவும், நேருவும் புண்ட மகனே, குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக பேசியதாக சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள் மாட்டுக்கொட்டகையில் ஏற்பட்டதா அல்லது காலி இடத்தில் ஏற்பட்டதா என்றால் வீட்டு வாசலில் வைத்து ஏற்பட்டது. பிரச்சனையின் போது நான் எனது கையில் ஆயுதம் எதுவும் வைத்திருந்தேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 17.06.2022 ஆம் தேதி புகார் அளித்தேன். புகார் யார் எழுதிக்கொடுத்தது என்றால் நான் தான் எழுதிக்கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 08.00 மணியிருக்கும். அந்த புகார் மனுவை பார்த்தால் உண்மையில் நடந்த விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

4) புகார் கொடுத்த பிறகு நான் மருத்துவமனை சென்றேனா என்றால் கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு அங்கிருந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அதன்பிறகு போலிசாரிடம் புகார் எதுவும் அளித்தேன் என்றால் இல்லை. அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 18.06.2022 ஆம் தேதி வேலுச்சாமி என்ற போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து எழுதிக்கொண்டு படித்து காட்டி கையொப்பம் பெற்றுக்கொண்டார். அதன் பிறகு போலிசார்

விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த நேரம் இருட்டான இரவு நேரம் என்றால் சரியல்ல. மாலை 07.30 மணிக்கு நடைபெற்றது. போலிசார் விசாரணையில் 1ஆம் எதிரி, 2ஆம் எதிரியிடம் அவன குத்துடா என்று சொன்னதாகவும், அதற்கு 2 ஆம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் எனது வலது மார்பில் குத்தியதாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மாலை 07.00 மணியளவில் எனது மகன் எதிரிகளிடம் பிரச்சனை செய்து அவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தினார் என்றாலும் அதன்பிறகு வேலைக்கு சென்றுவிட்டு வந்த நான் எதிரிகளிடம் மாடு கட்டும் இடத்தில் வைத்து வாய்தகராறில் ஈடுபட்டேன் என்றாலும் அப்போது கீழே தவறி மாடு கட்டும் கம்பியின் மீது விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் எனது மகன் எதிரிகளுக்கு ஏற்படுத்திய காயத்திற்காக அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்றுள்ள தகவல் அறிந்து, எதிரிகள் மீது பொய்யாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றாலும், அந்த புகார் மனு எங்களுக்கு சாதகமாக இல்லை என்பதால் காவல் துறையினரின் ஆலோசனையின் பேரில் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து எனக்கு எதேச்சையாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ளது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-117/2023**
**Dated :21.07.2026**
**Deposition of witness for : P.W.2**

**Cross examination of PW2 (Eye witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தவமணி | வயது | : | 55 |
| கணவர் பெயர் | : | ராஜேந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | அரியாணிப்பட்டி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**BNSS. பிரிவு 348–ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 248/2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு,**
**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) போலிசார் விசாரணையில் கவிதா கத்தியை எடுத்து கொடுத்து குத்தி கொல்லுடா என்று சொன்னதாக சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் எதிரிகள் மூவரும் என்னை புண்டா மகனே, குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக பேசியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரணையில் 2 ஆம் எதிரி தனுஷ் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லமால் விடமாட்டேன் என்று சொன்னதாக சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி விவரங்களை நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டிற்கு வருவதற்கு முன்பாக யார் யார் வீட்டில் இருந்தோம் என்றால் நான் எனது மகள் மற்றும் எனது மகன் ஆகிய மூவரும் வீட்டில் இருந்தோம். எனது கணவர் எங்கு வேலைக்கு சென்று வந்தார் என்றால் புனல்குளம் சென்றுவிட்டு வந்தார். எனது கணவர் வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு சுமார்07.30 மணியிருக்கும். அதற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நடந்த பிரச்சனை பற்றி எனது கணவருக்கு நேரடியாக தெரியாது என்றாலும் நாங்கள் சொல்லிதான் தெரியும் என்றாலும் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது எனது கணவர் வந்தார்.

2) எனது கணவர் வருவதற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே சுமார் அரை மணி நேரம் பிரச்சனை நடந்திருக்கும் என்றால் சரிதான். அந்த பிரச்சனை எது

சம்மந்தமாக ஏற்பட்டது என்றால் மின் இணைப்பு சம்மந்தமாக ஏற்பட்டது தான். அப்போது எனது மகன் குடிப்போதையில் இருந்தார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு கிழக்கில் நாங்கள் மாடுகள் கட்டும் இடமும், எதிரிகள் ஆடு, மாடுகள் கட்டும் இடம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் அவர்கள் இடத்தில் சென்ட்ரிங் கம்பிகளை ஊன்றி ஆடு, மாடுகள் கட்டியிருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் எங்கள் இடத்தில் முளைக்குச்சி ஊன்றி மாடுகள் கட்டியிருந்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் தான் எனது கணவர் வருவதற்கு முன்பாக பிரச்சனை நடந்து கொண்டிருந்தது என்றால் எங்கள் வீட்டு வாசலில் நடந்தது. எங்கள் சண்டைக்கு பிறகு எனது கணவர் வந்து கேட்டாரா என்றால் கேட்டார். அவர் கேட்டபோது தான் அவரை கத்தியால் குத்திவிட்டார்கள்.

3) எனது கணவர் கேட்டபோது அவரை கத்தியால் யாரும் குத்தவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆடு, மாடுகள் கட்டும் இடத்தில் தவறி விழுந்ததால்தான் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் வருவதற்கு முன்பாக நாங்கள் எதிரிகளை தாக்கிவிட்டோம் என்றாலும் அதில் ஏற்பட்ட காயத்திற்காக எதிரிகள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றுள்ள தகவல் அறிந்து, எதிரிகள் மீது பொய்யாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றாலும், அந்த புகார் மனு எங்களுக்கு சாதகமாக இல்லை என்பதால் காவல் துறையினரின் ஆலோசனையின் பேரில் அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து அவருக்கு எதேச்சையாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ளது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-117/2023**
**Dated :21.07.2026**
**Deposition of witness for : P.W.3**

**Cross examination of PW3 (Eye witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளவரசி | வயது | : | 29 |
| கணவர் பெயர் | : | சக்திவேல் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | அரியாணிப்பட்டி | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**BNSS. பிரிவு 348–ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 248/2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) போலிசார் விசாரணையில் எதிரி தனுஷ் வீட்டிற்குள் சென்று கட்டை, கம்பு, கத்தி ஆகியவற்றை எடுத்துவந்தார் என்றும் நாங்கள் தேக்குவதற்குள் கத்தியால் எனது மாமனாரை வலது மார்பில் குத்திவிட்டார் என்றும் சொன்னேனா என்றால் சொன்னேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை நேரில் விசாரித்தார்களா என்றால் சம்பவத்திற்கு மறுநாள் வீட்டிற்கு வந்து காலை சுமார் 08.00-09.00 மணிக்குள் விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது வேறு யாரும் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. எனது மாமியாரும், கணவரும் மருத்துவமனையில் இருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் எப்போது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் எனது கணவர் அன்றைய தினம் மாலை வந்தார். எனது மாமியார் 15 நாட்கள் கழித்துதான் வந்தார். எனது மாமனாருக்கும், எனது கணவருக்கும் குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எனது மாமனார் வெளியே சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்று சொல்லமுடியமா என்றால் எனது மாமனார் வீட்டில்தான் இருந்தார்.

2) அன்றயை தினம் காலையிலிருந்து நாங்கள் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் வரும் வரை எனது மாமனார் வீட்டில்தான் இருந்தார் என்றால் ஆமாம். எனது மாமனார் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் இடையில் ரொம்ப நாட்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எதனால் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது என்றால் இடப்பிரச்சனை

காரணமாக பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது. ஏற்கனவே எனது மாமனார் மீது புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அவ்வாறு வழக்கு எதுவும் பதிவு செய்யபடவில்லை. போலிசார் விசாரணையில் நாங்கள் அனைவரும் கத்தியுடன் தனுஷ் என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என்கையில் தான் என்று மிரட்டியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். எனது கணவர், மாமியார் மற்றும் எதிரிகளுக்கும் இடையே அன்றைய தினம் இரவு 07.30 மணிக்கு முன்பாக பிரச்சனை நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு பிரச்சனை எதுவும் நடக்கவில்லை. நான் சம்பவத்தன்று ஊரில் இல்லை என்றாலும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-117/2023**
**Dated :21.07.2026**
**Deposition of witness for : P.W.9**

**List of witness LW3 examined as PW9 (Eye witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | வயது | : | 36 |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | அரியாணிப்பட்டி | தொழில் | : | வெளிநாடு வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை ஆவார். அ.சா.2 எனது தாயார் ஆவார். அ.சா.3 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி கவிதா ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். எனது தாத்தா பெயரில் இருந்த மின் இணைப்பினை 1 ஆம் எதிரி போலி கையெழுத்து போட்டு அவர் பெயரில் மாற்றிக்கொண்டார். கடந்த 17.06.2022 ஆம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் எங்கள் வீட்டு கொல்லை வாசல்படி அருகில் எனது அப்பா 1 ஆம் எதிரியிடம் பொதுவில் இருந்த மின் இணைப்பினை எனக்கு தெரியாமல் எவ்வாறு மாற்றிக்கொண்டாய் என்று கேட்டார். அதற்கு 1 ஆம் எதிரி நான் அவ்வாறு தான் செய்வேன் என்று சொன்னார். அப்போது எதிரிகள் நேரு, கவிதா ஆகியோர் இனிமேல் என்ன முறை பார்க்கிறாய் என்று சொல்லி எதிரி தனுஷிடம் குத்த சொன்னார்கள். எதிரி தனுஷ் கத்தியால் எனது தந்தையின் வலது மார்பில் குத்தினார். பின்னர் எதிரி தனுஷ் உன்னை எப்போ இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி எங்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தினார். தற்போது வரை எங்களுக்கு பயமாக உள்ளது. நான் வெளிநாட்டில் இருப்பதால் எதிரிகள் எப்போது என்ன செய்வார்கள் என்று எனக்கு பயமாக உள்ளது. பின்னர் காயமுற்ற எனது தந்தையை கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். அங்கு பரிசோதித்துவிட்டு உயிருக்கு ஆபத்தாக இருப்பதாக கூறி தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு எனது தந்தை 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எங்கள் வீட்டின் முகப்பு வாசல் வடக்கு பார்த்து உள்ளது என்றாலும், கொல்லைவாசல் கிழக்கு பார்த்து உள்ளது என்றாலும் சரிதான். கொல்லைவாசலுக்கு கிழக்கு புறம் நாங்களும் எதிரிகளும் மாடு கட்டும் இடம் உள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எனது தந்தை இரவு 07.30 மணியளவில் எங்கள் வீட்டில் கொல்லைவாசல் பக்கம் நின்று எதிரிகளிடம் மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டதாக சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி மாடு கட்டும் இடத்திற்கு நேர் வடக்கே எதிர் புறம் எதிரிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை கொல்லைப்பக்க வாசலில் நின்று கேட்டபோது தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் ஆமாம். (சாட்சி தாமாக தற்போது வீட்டு வாசலில் வைத்து ஏற்பட்டதாக சொல்கிறார். ) எனது தந்தை அன்றைய தினம் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் அவர் வீட்டில் தான் இருந்தார்.

2) நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் எதிரிகளிடம் பிரச்சனை செய்து காயத்தை ஏற்படுத்தினேன் என்றாலும், அது தொடர்பாக அவர்கள் கொடுக்க இருந்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக பின்யோசனையுடன் நானும் எனது தந்தையும் சேர்ந்து பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தனுஷ் எங்களுக்கு அச்சம் ஏற்படுத்தும் வகையில் மிரட்டியதாக இதற்கு முன்பாக வேறு யாரிடமும் சொன்னேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஓம்.நா.சிவபழனி)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**